# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்.469/2016/பே.2**
**ஆணை எண். 79 /2018– நாள்: 28 –03–2018**

**ஓமலூர் பொதுமக்கள்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.** -- முறையீட்டு மனுதாரர்

**திரு. பிரகாஷ்,**
**முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.** -- எதிர் மனுதாரர்

**ஆணை**

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊர் பொதுமக்கள் என்கிற நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.05.2016 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.469/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் உரிய பரிசீலனைகளின் அடிப்படையில் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஓமலூர் பொதுமக்கள் சார்பில் வரப்பெற்ற புகார் மனுவில் ஓமலூர் பேரூராட்சியில் துப்புரவு பணியாளர் பணியிடம் காலியாக இருந்ததாகவும், இதனை மேற்படி பேரூராட்சியில் துணைத் தலைவராக இருந்த திரு பிரகாஷ் என்பவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தலைவராக இருந்த போது பிற்படுத்தப்பட்டோர் இன சுழற்சியில் தேர்வு செய்யவேண்டிய மேற்படி பணியிடத்தில் கையூட்டு பெற்றுக் கொண்டு தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்த ஒருவரை பணியமர்த்தியதாகவும் தங்களது புகார் மனுவில் தெரிவித்து விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 02.06.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி ஓமலூர் பேரூராட்சி செயல் **அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.**

ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 469/2016/அ.2/நாள் 28.12.2017ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சியில் திரு அ.பிரகாஷ் என்பவர் 25.10.2011 முதல் 27.12.2012ம் தேதி வரை துணைத் தலைவராகவும், 28.12.2012 முதல் 21.09.2014 வரை பேரூராட்சி தலைவர் பதவியில் (பொறுப்பு) வகித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி ஓமலூர் பேரூராட்சியில் 01.07.2014 முதல் துப்புரவு பணியாளர் பணியிடம் காலியாக இருந்ததாகவும், அப்போதைய சூழ்நிலையில் நிர்வாக காரணம் கொண்டு மேற்படி பணியிடம் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். ஓமலூர் பேரூராட்சி கடித எண் 343/2014/ நாள். 08.09.2017ன்படி மாவட்ட வேலை வாய்ப்பகத்தில் இருந்து பட்டியல் பெறப்பட்டு பேரூராட்சி அலுவலகத்தி 28.09.2017ல் நேர்காணல் நடத்தப்பட்டதாகவும், இதில் 14 நபர்கள் கலந்து கொண்டதாகவும், இவர்களில் ஓமலூர் பேரூராட்சி மன்ற நியமனக்குழு தீர்மானம் எண் 3(3) நாள் 28.09.2017ன்படி திரு எம். குப்புசாமி என்பவர் தேர்வு செய்யப்பட்டு பேரூராட்சி பணி உத்திரவு ந.க.எண். 343/2014/அ.1/நாள் 28.09.2017ன்படி பணி ஆணை வழங்கி மேற்படி பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேற்படி துப்புரவு பணியாளர் பணியிடம் பூர்த்தி செய்யப்படும்போது திரு அ.பிரகாஷ் என்பவர் ஓமலூர் பேரூராட்சியில் துணைத்தலைவராகவும், தலைவராகவும் (பொறுப்பு) வகித்து வந்ததாகவும் அந்த சமயத்தில் இது சம்பந்தமாக எந்தவிதமான புகாரும் எழவில்லை எனவும் தனது அறிக்கையில் ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 25.01.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் இப்பொருள் தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவத்தில் 15.03.2018 அன்று துப்புரவு பணியாளர் பணியமர்த்தப்பட்டமைக்கான ஆவணங்களுடன் ஆஜராக ஆணையிடப்பட்டது.

ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 15.03.2018 அன்று ஆஜராகி தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

" ....தான் கடந்த 11 மாதங்களாக ஓமலூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பணிபுரிந்து வருவதாகவும் புகார் மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். இம்மனு குறித்து தன்னால் 28.07.2017ல் ஒரு அறிக்கை சமர்ப்பித்ததாகவும், உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ 25.01.2018ம் நாளிட்ட அறிவிப்பாணைக்கான அறிக்கையினை தற்போது சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஓமலூர் பேரூராட்சியில் 2010 ல் இருந்து இன சுழற்சி பதிவேட்டில் செயல் அலுவலர்களால் எந்தவித கையொப்பமும் இடப்படவில்லை எனவும், 28.09.2017ல் துப்புரவு பணியாளர் பணியிடம் ஒன்று ஆதி திராவிடர் (பொது) ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதற்காக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த பணியிடம் ஆதி திராவிடர் (பொது) இடத்தில் தேர்வு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஓமலூர் பேரூராட்சி அலுவலகத்தில் இன சழற்சி பதிவேடு உரிய முறையில் பராமரிக்கப்படாமல் இருந்ததால், சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரது உதவி கோரியதாகவும் அதன் அடிப்படையில் எடுத்த விவரங்களின்படி இப்பதவி ஆதி திராவிடர் பொது பிரிவிற்கு வரும் என தெரிவிக்கப்பட்டு அதற்கான சான்றும் தன்னிடத்தில்

வழங்கப்பட்டதாவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஓமலூர் பேரூராட்சியின் தனி அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி பணியிடத்திற்கான பணியாளர் தேர்வு செய்யப்பட்டதாகவும், இது சம்பந்தமாக இதுவரை யாரும் நேரிலோ தபால் மூலமாகவோ தன்னிடம் புகார் எதுவும் கூறப்படவில்லை எனவும், மேற்படி பேரூராட்சியில் 25 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் உள்ளதாகவும் அதில் 24 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தனது வாக்கு மூலத்தில் ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது வாக்குமுலத்தில் தெரிவித்துள்ள விவரப்படி உரிய அறிக்கைகளும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பட்டியல்கள், ஓமலூர் பேரூராட்சியின் தனி அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் அவர்களால் நடத்தப்பட்ட நியமனக்குழுக் கூட்ட நடவடிக்கைகளின் நகலும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனு, ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம், துப்புரவு பணியாளர் பணியிடம் நிரப்பட்டமைக்கான கடைபிடிக்கப்பட்ட அறிக்கைகள் ஓமலூர் பேரூராட்சியில் தனி அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் நடத்தப்பட்ட நியமனக்குழுக் கூட்ட நடவடிக்கைகள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. மனுவில் குறிப்பிட்டுள்ள திரு அ.பிரகாஷ் என்பவர் ஓமலூர் பேரூராட்சியில் 25.10.2011 முதல் 27.12.2012 வரை துணைத் தலைவராகவும், 28.12.2012 முதவ் 21.09.2014 வரை தலைவர்(பொறுப்பு) பதவியும் வகித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் மேற்படி பணியிடம் திரு அ. பிரகாஷ் என்பவர் பதவி வகித்த காலத்தில் நிரப்பப்படவில்லை. இப்பணியிடம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பட்டியல் பெறப்பட்டு இப்பணியிடத்திற்கான இன சுழற்சி விவரங்கள் அறியப்பட்டு, ஓமலூர் பேரூராட்சியின் தனி அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் சேலம் அவர்களால் 28.09.2017 அன்று நேர்காணல் நடத்தப்பட்டு பணியிடத்திற்காக நேர்காணலுக்கு வந்த 14 நபர்களில் ஒருவரை தெரிவு செய்யப்பட்டமைக்கான கூட்ட நகல் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது பரிசீலிக்கப்பட்டது. மேலும் புகார் மனுவுடன் இப்பணியிடம் முறையாக நிரப்பப்படவில்லை எனபதற்கான எவ்வித ஆதார ஆவணமும் சமர்ப்பிக்காத நிலையில் இம்மனு முகாந்திரமற்றதாக கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 28–ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

-//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//-

செயலாளர்

பெறுநர்

1.செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்

**2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
சேலம்.**